**இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் - 2018**

---

## 1.1 பாதகமான அபிப்பிராயம்

இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன்கூடிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தினதும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.
எனது அறிக்கையின் பாதகமான அபிப்பிராயத்தற்கான அடிப்படை பகுதியில் கலந்துரையாடப்பட்ட விடயங்களின் முக்கியத்துவத்தின் காரணமாக கூட்டுத்தாபனத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் பிரதிபலிக்கவில்லை என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 பாதகமான அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் பாதகமான அபிப்பிராயம் ஒன்று வழங்கப்படுகின்றது.
இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.
நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கூட்டுத்தாபனத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது கூட்டுத்தாபனத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் நிதியம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.
கூட்டுத்தாபனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.
2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள்

மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வு விடயப்பரப்பு**

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளரின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.
துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால்கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கூட்டுத்தாபனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிறுவகத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிறுவகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாகக் காணப்பட்ட

கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலம் பினிவருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது கூட்டுத்தாபனத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்
- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நிதியத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க கூட்டுத்தாபனம் செயற்படுகின்றதாஎனவும்
- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்
- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கருத்துரை

### 1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நியமம் இலக்கம் 07 இன் 31 ஆம் பந்தியின் பிரகாரம் வட்டி பெறுவனவுகளிலிருந்து வரும் காசுப் பாய்ச்சல் வேறாக காசுப் பாய்ச்சல் கூற்றில் வெளிப்படுத்த வேணடிய போதிலும் மீளாயவாண்டில் பணமாக கிடைத்த ரூபா 2,853,628 ஆன வட்டி வருமானம் வேறாக வெளிப்படுத்தப் பட்டிருக்கவில்லை. | இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 07 இன் 31 ஆம் பந்தியின் பிரகாரம் வட்டி பெறுவனவு களிலிருந்து உருவாகும் காசுப் பாய்ச்சல் வேறாக காண்பிக்கப்பட வேண்டும் என்ற கூற்றுடன் இணங்குவதாகவும் வட்டி வருமானத்தில் உருவாகும் காசுப் பாய்ச்சல் காண்பிக்கப்பட்ட போதும் அது வேறாகவெளிப்படுத்தல் இடம்பெறவில்லை. காசுப்பாய்ச்சல் தயாரிக்கும் போது இடம்பெறும் இவ்வெளிப்படுத்தல் தவறை சரியாக வெளிபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. | இலங்கை கணக்கீட்டு நியமங்களின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | நியமம் இலக்கம் 07 இன் 44 ஆம் பந்தியின் பிரகாரம் காசுப் பாய்ச்சலில் காசல்லாத கொடுக்கல் வாங்கங்கள் உள்ளடக்க கூடாத போதும் பிற்போடப்பட்ட சொத்துக்கள் மற்றும் நடைமுறை வேலைகளின் முழுக் கூட்டுத்தொகை ரூபா 683,214 தொகை காசுப் பாய்ச்சல் கூற்றில் | காசுப் பாச்சல் கூற்று தயாரிக்கும் கணக்கீட்டு நியமம் 07 இன் பிரகாரம் இதன் பின்னர் இதனை சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | இலங்கை கணக்கீட்டு நியமங்களின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட |

| | | | |
|---|---|---|---|
| | முதலீட்டு செயற்பாடுகளின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. | | வேண்டும். |
| (இ) | நியமம் இலக்கம் 13 இன் 37 ஆம் பந்தியின் பிரகாரம் 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலபகுதியில் இருந்து நிதி நிலைமைக் கூற்றின் பெறுமதி ரூபா 649 மில்லியனாக இருந்து வரும் உரித்துக் காணி மற்றும் கூட்டுத்தாபனத்தின் 14 தோட்டங்களுக்குரிய 10,917 ஏக்கர் காணி நியாயமான பெறுமதியில் மதிப்பீடு செய்து கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | நிலையான சொத்துக்கள் பதிவேட்டை தயாரிக்கும் போது இந்நிலையான சொத்துக்களை இனங் காணுதல், பெறுமதியிடல், ஏடுகளைத் தயாரிப்பதற்காக தேவையான ஆரம்ப படிமுறைகளாக ஒவ்வொரு தோட்டத்திலும் நிலையான சொத்துக்களை இனங்காணுதல் மற்றும் சொத்துக்கள் பட்டியலொன்றை தயாரித்தல் தற்போது எதிர்வரும் நடவடிக்கைகளுக்காக அதாவது நிலையான சொத்துக்களை மதிப்பீடு செய்தல் மற்றும் பதிவேடுகளைத் தயாரிப்பதற்காக தேவையான விசேடத்துவ சேவைகளை அதற்காக நிபுணத்துவமான நபரொருவரிடமிருந்தோ அல்லது நிறுவன மொன்றிடமிருந்தோ பெற்றுக் கொள்ளப்பட வேண்டும். இதற்காக தேவையான நிதியை கோரி அமைச்சிற்கும் பொது திறைசேரிக்கும் கடிதங்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதுடன் அது தொடர்பாக ஏதேனும் நியாயமான கவனமொன்றை செலுத்துவதாக தயவுடன் அறிய தருகின்றேன். | இலங்கை கணக்கீட்டு நியமத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஈ) | நியமம் இலக்கம் 16 இன் 37 ஆம் பந்தியின் பிரகாரம் ஒரே சம தன்மையான மற்றும் பயன்பாட்டில் காணப்படும் சொத்துக்கள் மாத்திரம் வகைப்படுத்தப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்த போதும் மீளாய்வாண்டின் நிதி நிலைமைக்கூற்றில் கூட்டுத்தாபனத்திற்குரிய தோட்டங்களில் காணப்படும் கணனிகள், உபகரணங்கள், தளபாடங்கள் மற்றும் பொருத்திகள் ஆகிய நிலையான சொத்து வகைகள் அனைத்து உபகரணங்களும் தளபாடங்களும் பொருத்திகளும் தனி உருப்படிகளின் கீழ் நிதி நிலைமைக் கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்தது. | நிலையான சொத்துக்கள் பதிவேட்டை தயாரிக்கும் போது இந்நிலையான சொத்துக்களை இனங் காணுதல், பெறுமதியிடல், ஏடுகளைத் தயாரிப்பதற்காக தேவையான ஆரம்ப படிமுறைகளாக ஒவ்வொரு தோட்டத்திலும் நிலையான சொத்துக்களை இனங்காணுதல் மற்றும் சொத்துக்கள் பட்டியலொன்றை தயாரித்தல் தற்போது எதிர்வரும் நடவடிக்கைகளுக்காக அதாவது நிலையான சொத்துக்களை மதிப்பீடு செய்தல் மற்றும் பதிவேடுகளைத் தயாரிப்பதற்காக தேவையான விசேடத்துவ சேவைகளை | இலங்கை கணக்கீட்டு நியமத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் தயாரிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | அதற்காக நிபுணத்துவமான நபரொருவரிடமிருந்தோ அல்லது நிறுவனமொன்றிடமிருந்தோ பெற்றுக்கொள்ளப்பட வேண்டும். இதற்காக தேவையான நிதியை கோரி அமைச்சிற்கும் பொது திறைசேரிக்கும் கடிதங்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதுடன் அது தொடர்பாகஏதேனும் நியாயமான கவனமொன்றை செலுத்துவதாக தயவுடன் அறிய தருகின்றேன். | |
| (உ) | நியமம் இலக்கம் 16 இன் 73(ஈ) ஆம் பந்தியின் பிரகாரம் பயன்படுத்த வேண்டிய பெறுமானத்தேய்வு அல்லது பயன்பாட்டு ஆயட்காலம் நிதிக்கூற்றுக்களின் மூலம் வெளிப்படுத்தப்பட வேண்டிய போதும் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்கள் மூலம் காணி அபிவிருத்தி கிரயம் பெறுமானத்தேய்வு செய்யப்படும் போது பயன்படுத்தப்பட்ட பெறுமானத்தேய்வு விகிதம் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | மீளாய்வாண்டில் அதாவது 2018 ஆம் ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது ஏற்பட்ட விடுபாட்டு தவறொன்றினால் ப்இது இறுதி 2018 கணக்குகளில் சேர்க்கப்படாது இருந்ததுடன் இந்த விடுபாடு தவறு மேலும் 2019 ஆம் நிதியாண்டிற்கான இறுதிக் கணக்குகளில் பிழையை சரிசெய்ய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. | இலங்கை கணக்கீட்டு நியமத்தின் ஏற்பாடுகளின் தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஊ) | நியமம் இலக்கம் 40 இன் 75(அ) பந்தியின் பிரகாரம் முதலீட்டு ஆதனங்களை கணக்கீடு செய்வதற்கு பயன்படுத்தும் மாதிரி நிதிக்கூற்றுக்கள் மூலம் வெளிப்படுத்தபபட வேண்டிய போதிலும் கூட்டுத்தாபனத்தின் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் வெளிப்படுத்தப்பட்ட முதலீட்டு ஆதனங்கள் கிரய மாதிரியா அல்லது நியாயமான பெறுமானம் ஆகிய வகையில் எந்த முறை பயன்படுத்தப்பட்டுள்ளதென வெளிப்படுத்தப்படாதிருந்ததுடன் 1992 ஆம் ஆண்டின் பிராந்திய தோட்டக் கம்பனி ஐந்தொகையில் ரூபா 1,611.5 மில்லியனாக காண்பிக்கப்பட்டிருந்த பெறுமதி மீளாய்வாண்டின் நிதி நிலைமைக் கூற்றுக்களில் முதலீட்டு ஆதனங்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. | இம்முதலீட்டு ஆதனம் 2012 கணக்குகளுக்கு ரூபா 1,611,520,641 என்ற பெறுமதி கொண்டு வரப்பட்டுள்ளதுடன் இங்கு காணப்படும் சிக்கலுடன் இணங்குவதாக அறிய தருகின்றேன். இந்த பிராந்திய தோட்டங்களின் நேரடி நிர்வாகம் பொது திறைசேரியினால் மேற்கொள்வதுடன் வருடாந்தம் மேற்கொள்ளப்படுவதுடன் மாற்றங்களை அறிக்கையிடுவதற்கும் வெளிப்படுத்துவதற்கும் தேவையான தகவல் தொடர்பு 1992 இன் பின்னர் கூட்டுத்தாபனம் மற்றும் பிராந்திய தோட்டங்களுக்கு இடையே ஏற்படுத்தப்பட்டிருக்கவில்லை. இக்காரணங்கள் அனைத்தையும் மிக விரைவில் தீர்வு செய்வதற்காக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. | இலங்கை கணக்கீட்டு நியமத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் காசுப் பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (எ) | நியம இலக்கம் 40 இன் 78(அ) பந்தியின் பிரகாரம் முதலீட்டு ஆதனங்களின் விபரங்கள் நிதிக்கூற்றுக்கள் மூலம் வெளிப்படுத்தபட வேண்டிய போதிலும் அதாவது 1982 பெப்ரவரி 27 ஆந் திகதி 181/12 ஆம் இலக்க வர்த்தமானி மூலம் கூட்டுத்தாபனத்திற்கு கையளிக்கப்பட்ட ஆதனங்கள் தொடர்பாக நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்க வில்லை. | இம்முதலீட்டு ஆதனம் 2012 கணக்குகளுக்கு ரூபா 1,611,520,641 என்ற பெறுமதி கொண்டு வரப்பட்டுள்ளதுடன் இங்கு காணப்படும் சிக்கலுடன் இணங்குவதாக அறிய தருகின்றேன். இந்த பிராந்திய தோட்டங்களின் நேரடி நிர்வாகம் பொது திறைசேரியினால் மேற்கொள்வதுடன் வருடாந்தம் மேற்கொள்ளப்படுவதுடன் மாற்றங்களை அறிக்கையிடு வதற்கும் வெளிப்படுத்து வதற்கும் தேவையான தகவல் தொடர்பு 1992 இன் பின்னர் கூட்டுத்தாபனம் மற்றும் பிராந்திய தோட்டங்களுக்கு இடையே ஏற்படுத்தப்பட்டிருக்கவில்லை. இக்காரணங்கள் அனைத்தையும் மிக விரைவில் தீர்வு செய்வதற்காக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. | இலங்கை கணக்கீட்டு நியமத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் காசுப் பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஏ) | நியம இலக்கம் 41 இன் 4 ஆம் பந்தியின் பிரகாரம் பயிர்செய்கை உயிரியல் விஞ்ஞான சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட வேண்டிய போதிலும் ரூபா 24,505,428 கிரயமான பயிர்செய்கை விஞ்ஞான சொத்துக்களின் கீழ் நிதி நிலைமை கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்தது. | நிலையான சொத்துக்கள் பதிவேடு உட்பட உயிரியல் சொத்துப் பதிவேடு தயாரிக்கும் பணியும் நடைபெற்று வருகிறது, மேலும் இலங்கை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் அறிக்கை இடுவதற்கும், எதிர்வரும் 2021 நிதியாண்டில் இவற்றைச் சரிசெய்வதற்கும் இந்த விடயங்களைத் திருத்தம் செய்வதற்கு தேவையான நிதி. ஒதுக்கீடுகளை பெற்றுக் கொள்ள அமைச்சிற்கும் பொது திறைசேரிக்கும் . அறிவித்துள்ளதுடன் கூட்டுத்தாபனத்தின் நிதி பிரச்சினையால் இச்செலவினங்களை மேற்கொள்வதற்கு தற்போது மேற்கொள்ள முடியாதுள்ளது. இது தொடர்பாக ஏதேனும் நியாயான கவனமொன்றை செலுத்துமாறு தயவுடன் அறிய தருகின்றோம் | இலங்கை கணக்கீட்டு நியமத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் காசுப் பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஐ) | நியம இலக்கம் 41 இன் 43, 44 மற்றும் 45 ஆம் பந்திகளின் பிரகாரம் உயிரியல் சொத்துக்கள் முதிர்ந்த முதிர்வடையாத பயிர்ச் செய்கையாக வெவ்வேறாக | நிலையான சொத்துக்கள் பதிவேடு உட்பட உயிரியல் சொத்துப் பதிவேடு தயாரிக்கும் பணியும் நடைபெற்று | இலங்கை கணக்கீட்டு நியமத்தின் ஏற்பாடுகளின் |

| | | | |
|---|---|---|---|
| | காண்பிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் நிதி நிலைமைக் கூற்றில் நடைமுறையல்லாத சொத்துக்களின் கீழ் வெளிப்படுத்தப்பட்டிருந்த ரூபா 152,272,484 ஆன உயிரியல் சொத்துக்கள் அவ்வாறு வகைப்படுத்தி சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | வருகிறது, மேலும் இலங்கை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் அறிக்கை இடுவதற்கும், எதிர்வரும் 2021 நிதியாண்டில் நிதிக் கூற்றுக்களில் இவற்றைச் சரிசெய்வதற்கும் இந்த விடயங்களைத் திருத்தம் செய்வதற்கு தேவையென குறிப்பிட்டு அமைச்சிற்கும் பொது திறைசேரிக்கும் அறிவித்துள்ளதுடன் கூட்டுத்தாபனத்தின் நிதி நெருக்கடியால் இச்செலவினங்களை தற்போது மேற்கொள்ள முடியாதுள்ளது. இது தொடர்பாக ஏதேனும் நியாயான கவனமொன்றை செலுத்துமாறு தயவுடன் அறிய தருகின்றோம் | பிரகாரம் காசுப் பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஒ) | நியம இலக்கம் 41 இன் 54 (உ) பந்தியின் பிரகாரம் பயன்படு உயிரியல் சொத்துக்கள் தொடர்பாக பயன்படு ஆயுட்காலம் அல்லது பயன்படுத்தும் சதவீதம் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டிய போதிலும் கூட்டுத்தானத்திற்குச் சொந்தமான 17 தோட்டங்களில் 4114 ஹெக்டேயர் தேயிலை பயிர்ச்செய்கை பெறுமானத்தேய்வு விகிதம் நிதிக்கூற்றுக்கள் மூலம் வெளிப்படுத்தப் பட்டிருக்கவில்லை. | இம்மீளாய்வாண்டில் அதாவது 2018 நிதியாண்டின் போது நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது விட்டுவிடல் தவறொன்றாக 2018 இறுதிக் கணக்கில் உள்ளடக்கப் படாததுடன் இந்த விட்டுவிடல் தவறு 2019 நிதியாண்டின் போது இறுதிக் கணக்குகளில் இருந்து சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு தயார்படுத்துள்ளது. | இலங்கை கணக்கீட்டு நியமத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் காசுப் பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டு கொள்கைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன

| | **கணக்காய்வு அவதானிப்பு** | **முகாமைத்துவத்தின் கருத்துரைகள்** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| (அ) | நிதிக்கூற்றுக்களில் கணக்கீட்டுக் குறிப்பு 3.1.4.2 ஆம் இலக்க கணக்கீட்டு கொள்கையின் பிரகாரம் நியாயமான பெறுமதியில் நுகர்வு உயிரியல் விஞ்ஞான சொத்துக்கள் மதிப்பீடு செய்வதாக குறிப்பிடப்பட்டிருந்த போதும் 2012 ஆம் ஆண்டில் நடைபெற்ற ரூபா 3,312,160,200 ஆன உயிரியல் சொத்துக்கள் மற்றும் 2018 ஆம் ஆண்டின் போது மூலதனமாக்கபப்ட்ட ரூபா 2,420,933 ஆன உயிரியல் விஞ்ஞான சொத்துக்கள் நியாயமான பெறுமதியில் மதிப்பீடு செய்து கணக்கீடு | உங்களால் குறிப்பிடப்பட்ட வேறுபாட்டிற்கு ஆண்டில் சேர்க்கப்பட்ட வர்த்தக பெறுமதி மூலதனமாக்கப்பட்டதே காரணமாகும். முன்னைய பல் ஆண்டுகளுக்கு முன்னராக இப்பெறுமதி வனப் பயிர்ச்செய்கை செலவினமாக மூலதனமாக்கப்பட்டு பெறுமானத்தேய்வு செய்யப்பட்டதுடன் உங்களால் முன்னர் அனுப்பி வைக்கப்பட்டிருந்த | நிதிக்கூற்றுக்களில் கணக்கீட்டுக் குறிப்பு 3.1.4.2 ஆம் இலக்க கணக்கீட்டு கொள்கையின் பிரகாரம் உயிரியல் விஞ்ஞான நுகர்வு சொத்துக்கள் நியாயமான பெறுமதியில் மதிப்பீடு |

| | | | |
|---|---|---|---|
| | செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும் இவ்வாறு நியாயமான பெறுமதிக்கு மதிப்பீடு செய்து கணக்கீடு செய்வதற்குப் பதிலாக கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான 11 தோட்டங்களில் 726.73 ஹெக்டேயர்களில் பரவிக் வனச் செய்கை மீளாய்வாண்டின் இறுதியில் 4 சதவீம் அதாவது ரூபா 698,603 ஆல் காலக்கழிவு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டமையால் கூட்டுத்தாபனத்தின் நட்டமும் அப்பெறுமதிால் மிகை கணிப்பீடு செய்யப்பட்டிருந்தது. | விசாரணையின் பிரகாரம் இம்மூலதன சேர்த்தல்கள் மேற்கொள்ளப்பட்டது. | செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

## 1.5.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதி நிலைமைக் கூற்றில் நிலையான சொத்துக்களின் கீழ் காண்பிக்கப்பட்டுள்ள ஏழு வகையான நிலையான சொத்துக்களுக்காக மீளாய்வாண்டில் சரியான பெறுமானத்தேய்வு அளவு ரூபா 6,716,561ஆக இருக்க வேண்டிய போதிலும் கூட்டுத்தாபனத்தின் பேரேட்டுக் கணக்குகள் மற்றும் சரியாக கணக்கிடப்பட்ட பெறுமானத் தேய்வுக்கு இடையே ரூபா 428,654ஆன அதிகரிப்பொன்று காணப்பட்டமையால் அந்த அளவினால் நட்டம் மிகையாக கணிப்பிடப்பட்டிருந்தது. | நிலையான சொத்துக்கள் பதிவேடு உட்பட உயிரியல் சொத்துப் பதிவேடு தயாரிக்கும் பணியும் நடைபெற்று வருகிறது, மேலும் இலங்கை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் அறிக்கை இடுவதற்கும், எதிர்வரும் 2021 நிதியாண்டில் இவற்றைச் சரிசெய்வதற்கும் இந்த விடயங்களைத் திருத்தம் செய்வதற்கு தேவையான நிதி. ஒதுக்கீடுகளை பெற்றுக் கொள்ள அமைச்சிற்கும் பொது திறைசேரிக்கும் . அறிவித்துள்ளதுடன் கூட்டுத்தாபனத்தின் நிதி பிரச்சினையால் இச்செலவினங்களை மேற்கொள்வதற்கு தற்போது மேற்கொள்ள முடியாதுள்ளது. இது தொடர்பாக ஏதேனும் நியாயான கவனமொன்றை செலுத்துமாறு தயவுடன் அறிய தருகின்றோம் . | அவதானிப்பிற்கு உரிய பதில் வழங்கப்படவில்லை. நிலையான சொத்துக்களின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள சொத்துக்களின் பெறுமானத்தேய்வு அளவினை சரியாக கணிப்பிடப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் இறுதியில் கூட்டுத்தாபனத்தின் ரூபா 1,609,054 ஆன முதுரு கற்றை இருப்பொன்றும் ரூபா 23,381,823 ஆன கலேபொக்க, மிட்லேன்ட் மற்றும் ரங்கல ஆகிய தோட்டங்களில் 44,639 கிலோ கிராம் முடிவுத் தேயிலையும் 15 தோட்டங்களில் உரம், இரசாயன பொருட்கள் இருப்பு பௌதீக ரீதியில் மெய்மையாய்வு செய்யப்படாமல் | எமது தோட்டங்களில் நிதியாண்டு இறுதியில் இருப்புமெய்மையாய்வொன்று மேற்கொள்ளப்படாதிருந்ததுடனக் 2019 ஆம் ஆண்டு முதல் உங்களது ஆலோசணையின் பிரகாரம் அத்திகதியில் உள்ளவாறு பௌதீக இருப்பு மெய்மையாய்வு செய்யப்பட்டுள்ளதுடன | ஆண்டின் இறுதியில் இருப்பு மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டு அப்பௌதீக இருப்பு அளவு சரியாக மதிப்பீடு செய்யப்பட்டு நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட |

| | | | |
|---|---|---|---|
| | புத்தகப் பெறுமதியை அடிப்படையாக கொண்டு நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்தமையால் கூட்டுத்தாபனத்தின் நிதி வீளைவுகளின் சரியான தன்மை தொடர்பாக திருப்தியடைய முடியாமல் இருந்தது, | அப்புத்தக பெறுமதியுடன் தேவையான தேவையான சீராக்கங்கள் இருந்தால் அச்சீராக்கங்கள் இலங்கை கணக்கீட்டு நியமம் 02 பிரகாரம் மேற்கொள்ளப்பட்டு இறுதிக் கணக்குகளை தயாரிப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | வேண்டும். |
| (இ) | நிதி நிலைமைக் கூற்றில் நடைமுறைச் சொத்துக்களின் கீழ் கடன்பட்டோர் மீதிக்கு ரூபா 6,644,470 ஆன நாற்றுமேடை பெறுமதியொன்று உள்ளடக்கப்பட்டிருந்தது. அந்நாற்று மேடைகளின் பெறுமதியுடன் ஆறு தோட்டங்களில் ரூபா 4,978,340 என மதிப்பீடு செய்யப்பட்டிருந்த நாற்றுமேடைகள் பௌதீக ரீதியில் காணப்படவில்லை அல்லது காலாவதியானமையால் அவற்றின் பெறுமதி பூச்சிய பெறுமதியொன்றை எடுத்திருந்தது. | அடுத்த நிதியாண்டில் அதாவது 2019 ஆம் ஆண்டின் போது சீராக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | பௌதீக ரீதியாக காணப்படாத நாற்றுமேடைகளில் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் இருந்து நீககப்பட வேண்டும். |
| (ஈ) | தொழில் நியாயசபை வழக்கொன்றில் 2016 ஆம் ஆண்டில் கூட்டுத்தாபனத்திற்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த ரூபா 1,910,225 ஆன இழப்பீட்டுத் தொகை 2016 ஆம் ஆண்டில் நடைமுறைச் சொத்துக்களனி கீழ் வைப்புக்களாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. 2017 ஆம் ஆண்டில் நிதி நிலைமைக் கூற்றில் அத்தொகை செலவினமொன்றாக காண்பிக்கப்பட்டு நடைமுறைப்பொறுப்பொன்றாக வெளிப்படுத்தப்படுத்தப்பட்டிருந்தது, மேற்படி தவறு கணக்கீட்டு குறிப்பு காரணமாக மீளாய்வாண்டின் நிதி நிலைமை கூற்றிலும் அம்மீதி நடைமுறைச் சொத்துக்கள் மற்றும் நடைமுறைப் பொறுப்புக்களின் கீழ் எவ்வித மாற்றமும் இன்றிஅ வ்வாறே காணப்பட்டது. | இவ்வழக்கு தீர்ப்பிற்குரிய ஏதேனும் ஒதுக்கம் மேற்கொள்ள வேண்டுமென நியாயமான உறுதிப்படுத்தலொன்று ஏற்பட்டிருந்தமையால் அப்பணத்திலிருந்து நீதிமன்றக் கொடுப்பனவொன்று செய்யப்பட்டிருந்தது. (சட்டப் பிரிவின் ஆலோசணை படி) அதன் போது வங்கி கணக்கு வரவு வைக்கப்பட்டு ரூபா 1,910,225 மற்றும் இத்தொகை தற்போது நீதிமன்றத்தின் பொறுப்பில் காணப்படுவதால் அது நிலைமை விபரத்தின் நடைமுறை சொத்துக்களின் கீழ் காண்பிக்கப்பட்டது. அதன் பின்னர் உங்களால் வழங்கப்பட்டதன் பிரகாரம் அது Contingent Liability என்ற வகையில் இனங் காண்பதற்கு தேவையாக இருந்தமையால் அது முன்னைய ஆண்டின் இலாபத்திற்கு சீராக்கமொன்றாக இனங் காண்பதற்கு தேவையானதால் அது முன்னைய ஆண்டின் இலாபத்திற்கு சீராக்கமாக அது வரவும் (செலவினங்களை இனங்காணல்) மற்றும் எமக்கு | இத்தவறு நிதிக்கூற்றுக்களில் சீராக்கம் செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | திட்டவட்டமாக இனங்காண முடியாத கொடுப்பனவொன்றாக இருப்பதால் நீதிமன்ற தீர்ப்பு வழங்கப்படும் வரை இது நிகழத்தக்க பொறுப்பொன்றாக ஐந்தொகையில் காண்பிக்கப்பட்டுள்ளது. (2017 நிதியாண்டு) இதன் தீர்ப்பு இதுவரை கிடைத்துள்ளதுடன் அது 2019 நிதியாண்டின் போது எம்மால் இனங்காணப்பட்ட நிகழத்தக்க சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளுக்கு ஈடுசெய்யப்பட்டு இரட்டை பதிவு இடப்பட்டு நிதி நிலைமை விபரங்கள் நீக்கப்பட்டன. | |
| (உ) | மீளாய்வாண்டில் வாகன திருத்தங்களுக்காக செலவிடப்பட்ட ரூபா 602,039 ஆன மீண்டெழும் செலவினம் நிதி நிலைமைக் கூற்றில் நமைுறைச் சொத்துக்களில் வியாபார கிடைக்க வேண்டியதாக உள்ளடக்கியமை காரணமாக அப்பெறுமதியால் நடைமுறைச் சொத்துக்கள் மிகை கணிப்பீடு செய்யப்ப்டிருந்ததுடன் நட்டமும் அப்பெறுமானத்தினால் குறைத்து காட்டப்பட்டிருந்தது. | 2019 நிதியாண்டிலிருந்து இத்தவறு சீராக்கம் செய்யப்படும் | இத்தவறு நிதிக்கூற்றுக்களில் சீராக்கம் செய்யப்பட வேண்டும். |
| (ஊ) | (I) ரூபா 1,600,000 ஆன வட்டி செலவினம் காசுப் பாய்ச்சல் கூற்றில் நட்டத்திற்கு மேற்கொண்ட சீராக்கத்தின் கீழ் செய்யப்பட சீராக்கத்தில் சேர்க்கப்பட வேண்டிய போதிலும் அப்பெறுமதி கூட்டலாக காட்டப்பட்டு அந்தளவு மீண்டும் கழத்து காண்பிக்கப்பட்ட காரணத்தினால் நிதிக்கூற்றுக்களில் செயற்பாட்டின் மூலம் உருவாகிய காசுப்பாய்ச்சல் குறைவடைந்திருந்தது. | 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப் பாய்ச்சல் கூற்றில் செலுத்தப்பட்ட வட்டிச் செலவினம் (Finance Cost Paid) என அடையாளம் காணப்பட்டுள்ளது ரூபா 10,490,415 ஆகும். ரூபா 12,090,415 நிதிச் செலவாக அடையாளம் காணப்பட்டுள்ளது. அது அட்டுறு அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளுக்காக மேற்கொள்ளப்பட்ட சீராக்கங்களின் கீழ் சுட்டிக் காண்பிக்கப்பட்டுள்ளதுடன் நீங்கள் குறிப்பிட்ட சிலாபம் பெருந்தோட்டக் கம்பனி சார்பாக பணமாகச் செலுத்தப்படாத ஆனால் வட்டிச் செலவாகப் பெறப்பட்ட தொகை ரூபா 1,600,000 தொகை தனித் தனியாக குறிப்பிடப்பட்டுள்ளன. | நிதிச் செலவினம் காசுப்பாய்சசல் கூற்றில் காண்பிக்கும் போது பணமாக செய்யப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மாத்திரம் காசுப்பாய்சசல் கூற்றில் காண்பிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | அக்கொடுக்கல் வாங்கல் வேறாக காண்பிக்கப்பட வேண்டுமா செய்யக்கூடாத ஒன்றா என சீராக்கம் செய்ய வேண்டும் என்பது குறித்து இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 7 இன் பிரகாரம் மேற்கொள்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலும் இந்த காசுப்பாய்ச்சல் காரணமாக செயற்பாட்டின் மூலம் உருவாகும் காசுப்பாய்ச்சல் குறைவடைந்து இருந்தமை தொடர்பிலான கூற்றுடன் இணங்க முடியாது. சீராக்கங்களின் வேறுபாட்டை குறிப்பிடும் போது (Presentation) தனித்தனியாகக் காட்டப்பட வேண்டுமா அல்லது தேறிய் பெறுமதியைக் காட்ட வேண்டுமா என்பதைக் கருத்தில் கொண்டு 2019 ஆம் ஆண்டு முதல் தயாரிப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. | |
| (II) | முன்னைய காலப்பகுதிகளின் நட்டத்திற்கு செய்யப்பட்ட சீராக்கமாக மீளாய்வாண்டில் இனங்காணப்பட்ட ரூபா 1,081,138 ஆன பெறுமதி காசுப் பாய்ச்சல் கூற்றில் சீராக்கம் செய்யும் போது ரூபா 1,240,487 என ரூபா 159,349 குறைத்து சீராக்கப்பட்டிருந்தது. | முன்னைய காலப்பகுதிகளின் இலாபத்திற்கு அல்லது நட்டத்திற்கு செய்யப்பட்ட சீராக்கத்திற்காக ரூபா 1,240,487 காண்பிக்கப் பட்டிருந்ததுடன் ரூபா 159,349 ஆன பெறுமதியில் நிதித் தன்மையல்லாத ஆரம்ப மீதியில் காணப்பட்ட மீதிகளின் வேறுபாடு காணப்பட்ட மீதிகளில் வேறுபாடொன்று காணப்பட்டது. அது கீழே காட்டப்பட்ள்ளது.<br>(1) தோட்டங்களின் திரட்டிய பெறுமானத்தேய்வு (ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்) மீதி ஆரம்ப மீதி இறுதிக் கணக்குகளின் பிரகாரம் ரூபா 289,862,495 ஆக இருந்ததுடன் அது பேரேட்டுக் கணக்குகளின் படி ரூபா 289,803,147 ஆக இருந்தது இதில் வேறுபாடு ரூபா 59,349 ஆகும்<br>(2) தோட்டங்களின் உயிர் விஞ்ஞான சொத்துக்கள் 2018 ஆம் ஆண்டின் | இச்சீராக்கம் காசுப் பாய்ச்சல் கூற்றில் சீராக்கம் செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | ஆரம்ப மீதி (பேரேட்டுக் கணக்குகளின் பிரகாரம்) 2018 இறுதிக் கணக்கின் மீதிக்கு இடையே காணப்பட்ட ரூபா 100,000 வேறுபாடு இந்த ரூபா 159,349 ஆன மொத்த ஆரம்ப மீதி வேறுபாடு 2018 இன் இறுதிக் கணக்குகளுக்கு மேற் கொண்ட சீராக்கத்தின் வேறுபாடாக இருந்ததுடன் காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கும் போது கணக்கீட்ட நியம இலக்கம் 07 இன் பிரகாரம் சரி செய்ய நடவடிக்கை எடுப்போம். எவ்வாறாயினும் இந்த ஆரம்ப மீதிகளின் வேறுபாடு வருடக் கணக்காக இருந்து வரும் தவறொன்றாக இருப்பதுடன் அது 2018 ஆம் ஆண்டின் போது சீராக்கம் செய்யப்பட்டது. இவ்வெளிப்படுத்தல்கள் 2019 ஆம் ஆண்டிலிருந்து சரியாக சீராக்கப்பட்டுள்ளது. | |
| (III) | மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 235,500 ஆன கணனி மென்பொருட்களுக்காக அடுத்த ஆண்டில் பணம் கொடுப்பனவு செய்யபபட்டிரந்த போதும் மீளாய்வாண்டின் காசுப் பாய்ச்சல் கூற்றில் முதலீட்டுச் செயறபாடுகளின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. | தலைமை அலுவலகத்தின் மூலம் கணனி மென்பொருள் கொள்வனவிற்காக பணமாக செலுத்தப்படாத ரூபா 253,000 தொகை முதலீட்டு செயற்பாடுகளில் காணப்பட்ட காரணத்தினால் முதலீட்டு செயற்பாடுகளில் உருவாகிய தேிய காசுப் பாய்ச்சலில் குறைவொன்று இடம்பெற்றுள்ளா என காசுப் பாய்ச்சல் கூற்றை தயாரிப்பதற்குரிய இலங்கை கணக்கீட்டு நியமம் 07 இனை ஆராய்ந்து 2019 நிதியாண்டிலிருந்து முறையாக வெளிப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். | ஆதனங்கள், பொறிகள் உபகரணங்கள் கொள்வனவின் போது சரியாக காசுப் பாய்ச்சல் கூற்றில் சீராக்கம் செய்யப்பட வேண்டும். |

### 1.5.4 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அனைத்து தோட்ட நிர்வாக கணக்குகளில் வரவு மற்றும் செலவு மீதிகளுக்கு இடையே ரூபா 1,930,180 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. | இது அகற்றப்பட்டு ஏதேனும் தவறொன்று கூட்டுத்தாபனத்தின் கணக்குகளில் நிரூபணமாகலாம் (ஏனைய தோட்டங்களுடன் அண்மித்த கணக்குகளுக்கு ஒப்பாக) கருத்தொன்று காணப்படுகின்றது. ஏதேனும் வேறுபாடொன்றை மேற்கொள்வதற்கு தேவையாயின் அதற்காக உங்களின் ஆலோசணை எதிர்பார்க்கப்படுகின்றது. | அனைத்து தோட்ட நிர்வாக கணக்குகளில் இம்மீதிகள் கணக்கீட்டு தவறு காரணமாக உருவாகியுள்ளது. அதனை இனங் கண்டு காணப்படும் மீதிகளை சீராக்கம் செய்ய வேண்டும். |

### 1.5.5 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) நிதி நிலைமைக் கூற்றில் நடைமுறையல்லாத சொத்துக்களின் கீழ் காண்பிக்கப்பட்டுள்ள உயிர் விஞ்ஞான சொத்துக்கள், நுகர்வு உயிர் விஞ்ஞான சார் மற்றும் ஆதனங்கள், பொறிகள், உபகரணங்கள் ஆகிய நிலையான சொத்துக்கள் பதிவேடு மற்றும் குறித்த சொத்துக்கள் பதிவு செய்யப்பட்ட பேரேட்டுக் கணக்குகள் முறையே ரூபா 360,271,689 மற்றும் ரூபா 174,726,841 ஆன வேறுபாடுகள் காணப்பட்டன. | நிலையான சொத்துக்கள் பதிவேடு உட்பட உயிர் விஞ்ஞான சார் சொத்துக்கள் பதிவேடு தயாரித்தல் தற்போது இடம்பெற்று வருகின்றது. | இவ்வேறுபாடுகள் தொடர்பாக ஆராய்ந்து தேவையான சீராக்கங்கள் மேற்கொண்டு வேறுபாடுகளை சரி செய்யப்பட வேண்டும். |
| (ஆ) மீளாய்வாண்டின் நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் ஏனைய உப பயிர்ச்செய்கைக்காக சேர்க்கப்பட்டுள்ள பெறுமதி ரூபா 591,779 ஆக இருந்த போதும் தோட்ட கணக்கின் பிரகாரம் அம்மீதி ரூபா 273,637 ஆக இருந்தமையால் இம்மீதிகளுக்கு இடையே ரூபா 318,142 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. | நிலையான சொத்துக்கள் பதிவேடு உட்பட உயிர் விஞ்ஞான சார் சொத்துக்கள் பதிவேடு தயாரித்தல் தற்போது இடம்பெற்று வருகின்றது. | இவ்வேறுபாடுகள் தொடர்பாக ஆராய்ந்து தேவையான சீராக்கங்கள் மேற்கொண்டு வேறுபாடுகளை சரி செய்யப்பட வேண்டும். |

**1.5.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

அவதானிப்புக்கள் பின்வருமாறு

| கணக்காய்வு அவதானிப்பு | | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் இறுதியில் கூட்டுத்தாபனத்தின் கடன் கொடுத்தோர் மீதி ரூபா 1,089,138,983 ஆக இருந்ததுடன் அம்மீதியில் ரூபா 543,711,753 அதாவது 50 சதவீதம் 4 வருடங்கள் முதல் 14 வரையான காலப்பகுதிக்குரியதாக இருந்ததுடன் இந்நீணடகால கடன் மீதிகளை தீர்வு செய்வதற்கு மீளாய்வாண்டின் போதும் போதியளவு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இத்தொகையில் ரூபா 543,711,753 தொகை 14 வருடங்களுக்கு மேற்பட்டதாக இருந்ததுடன் இதில் 80% அளவு சேமலாப நிதியம், நம்பிக்கை பொறுப்பு நிதியம் மற்றும் செலுத்த வேண்டிய பணிக்கொடை தொகையாக இருந்தன. இவை உண்மையாகவே கூட்டுதுதாபனத்தின் செலுத்த வேண்டிய கடன் மீதிகளாகும் இது தொடர்பாக அதிகளவு கவனம் செலுத்தப்பட்டுள்ளதுடன் இக்கடன் மீதி எமது நிறுவனத்தில் சேவை புரியும் ஊழியர்களுக்கு உரித்தான கொடுப்பனவுகளாகும். இக்கடன் தொகை கொடுப்பனவிற்காக கௌரவ தலைவர் உடனன பணிப்பாளர் சபை தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளதுடன் 2021 நிதியாண்டின் போது இதற்காக கொடுப்பனவு செயற்பாடுகளை மேற்கொள்ள தேவையான நடவடிக்கைககள் எடுக்கப்பட்டுள்ளன. | இந்நீண்டகால கடன் மீதிகளை தீர்வு செய்வதற்கு போதியளவு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (ஆ) | 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளுக்குரிய ஓபல்கல தோட்டத்தின் மொத்தம் ரூபா 786,379 ஆன மரங்கள் கேள்வி வைப்பு முற்பணம் மீளாய்வாண்டின் இறுதி வரை தீர்வுசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | SLSPC/PL/TB/T-88/2010 மற்றும் SLSPC/PL/TB/T-111 ஆகிய கேள்விகளுக்கு பெற்றுக்கொண்ட வைப்பு முற்பண தொகை மீண்டும் கொடுப்பனவு மேற்கொள்ளமல் இருப்பது அவ்வாடிக்கையாளர் மற்றும் கூட்டுத்தாபனத்திற்கு இடையே ஏதேனும் சிக்கலான நிலைமையொன்று காணப்படுவதால் ஆகும். இதற்காக தேவையான தகவல்கள் இத்துடன் பெறுகை பிரிவிடமிருந்து | இக்கடன் மீதிகளை தீர்வு செய்வதற்கு பொருத்தமான நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| | | பெற்றுக்கொண்டு அடுத்த ஆண்டின் போது 2020 நிதியாண்டின் போது தேவையான கொடுப்பனவு செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு அல்லது கொடுப்பனவு செய்யாமல் இதனை கூட்டுத்தாபனத்தின் வருமானமாக இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு திட்டமிடப்படுகின்றது. | |
| (இ) | நிதி நிலைமைக் கூற்றில் நடைமுறைச் சொத்துக்களின் கீழ் காண்பிக்கப்பட்டுள்ள ரூபா 88,813,279 ஆன கடன்கொடுத்தோர் மீதியில் 04 இற்கும் 14 இற்கும் இடைப்பட்ட காலப்பகுதியிலிருந்து வருவதுடன் ரூபா 70,092,898 ஆன கடன் மீதிகளும் 15 ஆண்டுகளுக்கு மேற்பட்ட பீசீசீ கம்பனியிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 15,404,568 ஆன கடன் மீதியொன்று காணப்பட்டது. இககடன் மீதிகள அறவிடுவதற்காக கூட்டுத்தாபனத்தினால் மீளாய்வாண்டின் போதும் போதியளவு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பதில் அளிக்கப்பட்டிருக்கவில்லை. | இக்கடன் மீதிகளை அறவிடுவதற்காக கூட்டுத்தாபனத்தினால் செயற்திறனான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | 2014 ஒக்தோபர் 15 ஆந் திகதி கூட்டுத்தாபனத்தினால் உடன்படிக்கையொன்றுக்கு வராமல் ரூபா 6 மில்லியன் கடன் தொகை அல்கடுவ பெருந்தோட்டக் கம்பனிக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் 2015 ஆம் ஆண்டிலிருந்து இக்கடன் தொகை கொடுப்பனவு தவிர்ப்புச் செய்யப்பட்டமையால் அறவிடப்படாமல் காணப்படும் கடன் மீதி ரூபா 1,916,092 ஆக இருந்தது. | 2018 திசெம்பர் 31 இல் அல்கடுவ பெருந்தோட்டக் கம்பனிக்கு அறவிடப்பட வேண்டிய இந்த ரூபா 1,916,092 கம்பனியிடமிருந்த மீதி அல்கல்வு கம்பனியின் மீதி என உறுதிப்படுத்தப்பட்டுள்ளதுடன் அத்தொகையை அறவிடுவதற்காக தேவையான நடவடிக்கைகள் தற்போது தயார்படுத்தப்பட்டு வருகின்றது. 2020, 2021 நிதியாண்டுகளில் இப்பெற வேண்டிய மீதியை பெற்றுக் கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகளை கூட்டுத்தாபனத்தின் உயர்மட்ட முகாமைத்துவம் தீர்மானித்துள்ளது. | இக்கடன் மீதிகளை அறவிடுவதற்காக கூட்டுத்தாபனத்தினால் செயற்திறனான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.5.7 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதி நிலைமைக்கூற்றில் ரூபா 1,140,025,407 தொகையான ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் கீழ் காணப்படும் ரூபா 649,377,817 ஆன காணிகளினதும் ரூபா 175,008,452 ஆன கட்டிடங்களினதும் உரித்தினை உறுதிப்படுத்து வதற்காக உரித்து / அனுமதிப் பத்திரங்கள், பதிவுச் சான்றிதழ்கள் ரூபா 146,868,093 ஆன வாகனங்களின் உரித்தினை உறுதிப்படுத்து வதற்காக பதிவுச் சான்றிதழ்களும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | பல நிதியாண்டுகளாக இருந்து வரும் இந்த சிக்கலுக்கு சரியான நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று எமது நிறுவனத்தில் இதனை சீராக்குவதற்கு தேவையான நடவடிக்கைகள் 2020 ஆம் நிதியாண்டில் மேற்கொள்வதுடன் அதற்கு தேவையான நிலையான சொத்துக்கள் பதிவேடு இல்லாமையே காரணமாகும். (அனைத்து தோட்டங்கள், பிரதேச காரியாலயங்கள் மற்றும் தலைமை அலுவலகம்) என்பவற்றில் தற்போது நிறைவு செய்யப்பட்டுள்ளது. மதிப்பீட்டினை மேற் கொள்வதற்கு தேவையான நிதி கூட்டுத்தாபனத்திடம் இல்லாமையே இதற்கான காரணமாகும். காணப்படும் நிதி நெருக்கடிகள் காரணமாக அமைச்சு அல்லது பொது திறைசேரியின் நேரடி ஈடுபாட்டுடன் இதற்காக தேவையான நிதியை வழங்குவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கு அமைச்சிலிருந்தும் பொது திறைசேரியிலிருந்தும் கோரி கடிதங்கள் தற்போது தயார் படுத்தப்பட்டு வருகின்றது. அடுத்த 2021 நிதியாண்டின் போது இச்சிக்கல்களை தீர்வு செய்வதற்கு தேவையான ஏனைய நடவடிக்கைகள் தற்போது எடுக்கப்பட்டுள்ளன. | காணிகளினதும் கட்டிடங்களினதும் உரித்தினை உறுதிப்படுத்துவதற்காக உரித்து / அனுமதிப் பத்திரங்கள், பதிவுச் சான்றிதழ்கள் வாகனங்களின் உரித்தினை உறுதிப்படுத்து வதற்காக பதிவுச் சான்றிதழ்களும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | நிதி நிலைமைக் கூற்றில் நடைமுறையல்லாத சொத்துக்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்த ரூபா 3,314,581,133 ஆன நுகர்வு உயிரியல் விஞ்ஞான சொத்துக்கள் மற்றும் ரூபா | பல நிதியாண்டுகளாக இருந்து வரும் இந்த சிக்கலுக்கு சரியான நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று எமது நிறுவனத்தில் இதனை சீராக்குவதற்கு தேவையான | நுகர்வு உயிரியல் சொத்துக்கள் மற்றும் தாவர உயிரியல் சொத்துக்கள் மீதிகளை உறுதிப்படுத்துவதற்காக தேவையான பதிவேடுகள் மற்றும் தகவல்கள் |

| | | | |
|---|---|---|---|
| | 160,864,640 ஆன முகப்பு உயிரியல் சொத்துக்கள் மீதிகள் என்பவற்றை உறுதிப்படுத்துவதற்காக அதனுடன் தொடர்புடைய எந்தவொரு ஆவணங்களும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | நடவடிக்கைகள் 2020 ஆம் நிதியாண்டில் மேற்கொள்வதுடன் அதற்கு தேவையான நிலையான சொத்துக்கள் பதிவேடு இல்லாமையே காரணமாகும். (அனைத்து தோட்டங்கள், பிரதேச காரியாலயங்கள் மற்றும் தலைமை அலுவலகம்) என்பவற்றில் தற்போது நிறைவு செய்யப்பட்டுள்ளது. மதிப்பீட்டினை மேற் கொள்வதற்கு தேவையான நிதி கூட்டுத்தாபனத்திடம் இல்லாமையே ' இதற்கான காரணமாகும். காணப்படும் நிதி நெருக்கடிகள் காரணமாக அமைச்சு அல்லது பொது திறைசேரியின் நேரடி ஈடுபாட்டுடன் இதற்காக தேவையான நிதியை வழங்குவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கு அமைச்சில் இருந்தும் பொது திறைசேரியிலிருந்தும் கோரி கடிதங்கள் தற்போது தயார் படுத்தப்பட்டு வருகின்றது. அடுத்த 2021 நிதியாண்டின் போது இச்சிக்கல்களை தீர்வு செய்வதற்கு தேவையான ஏனைய நடவடிக்கைகள் தற்போது எடுக்கப்பட்டுள்ளன. | கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (இ) | 2012 ஆம் ஆண்டிற்கு முன்னிருந்து வரும் ரூபா 1,933,043 ஆன கட்டுநிதிக் கணக்கு மீதியொன்று மீளாய்வாண்டின் நிதிக் கூற்றுக்களில் நடைமுறைப் பொறுப்பின் கீழ் ஏனைய செலுத்த வேண்டியவைகளாக காண்பிக்கப்பட்டிருந்ததுடன், இம்மீதிகளை உறுதிப்படுத்துவதற்காக அதனுடன் தொடர்புடைய எந்தவொரு ஆவணங்கள் அல்லது தகவல ' கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | இது கணக்குகளை தயாரிக்கும் போது இடம்பெற்ற தவறாக தென்படுவதுடன் இதனை கணக்குகளிலிருந்து அகற்றுவதற்கு தேவையான நடவடிக்கைகளை 2021 ஆம் நிதியாண்டின் போது மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது | து கணக்குகளை தயாரிக்கும் போது இடம்பெற்ற தவறாக தென்படுவதுடன் இதனை கணக்குகளிலிருந்து அகற்றுவதற்கு தேவையான நடவடிக்கைகளை 2021 ஆம் நிதியாண்டின் போது மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |
| (ஈ) | தலைமை அலுவலகம் மற்றும் தோட்ட | உறுதிப்படுத்துவதற்கு முடியாத மீதிகள் | கடன்கொடுத்தோர் மீதிகளுக்காக மீதி |

| | | | |
|---|---|---|---|
| | அலுவலகங்களில் முறையே ரூபா 103,131,935 ஆன மற்றும் ரூபா 15,187,725 என ரூபா 118,319,660 கூட்டுத் தொகையான கடன்கொடுத்தோர் மீதிகள் மற்றும் ரூபா 53,881,380 ஆன 09 கடன்பட்டோர் மீதிகளுக்காக மீதி உறுதிப்படுத்தல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | எதிர்காலத்தில் அவர்களை தொடர்புபடுத்தி உறுதிப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன. | உறுதிப்படுத்துகின்ற பின்னைய கால மீதிகளை தீர்வு செய்வதற்காக அறிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும் |
| (உ) | 2006 ஆம் ஆண்டிலிருந்து மீளச்செலுத்தப்பட்டு கேள்வி வைப்பாக 12 தோட்டங்களில் ரூபா 6,379,570 ஆன மீதியொன்று நிதி நிலைமைக் கூற்றில் நடைமுறைப் பொறுப்பின் கீழ் மீளாய்வாண்டின் போதும் குறிப்பிடப்பட்டிருந்ததுடன் இவை எந்தக் கேள்விக்காக மீளச் செலுத்த வேண்டிய வைப்பொன்றாக என அல்லது உண்மையாகவே கேள்வி வைப்பொன்றா என உறுதிப்படுத்துவதற்கு எந்தவொரு சான்றும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | இவை எந்தக் கேள்விக்காக மீளச் செலுத்த வேண்டிய வைப்பொன்றாக என அல்லது உண்மையாகவே கேள்வி வைப்பொன்றா என அல்லது எந்த கேள்விதாரருக்கு செலுத்த வேண்டுமென்பது தொடர்பாக உறுதிப்படுத்துவதற்கு செலுத்த வேண்டுமென்பது தொடர்பாக இதுவரை எவ்வித பதிவேடொன்றும் கூட்டுத்தாபனத்திடம் காணப்படவில்லை. இம்மீதிகள் 2020 ஆம் நிதியாண்டில் புத்தகங்களிலிருந்து பதிவழிப்பதற்காக பணிப்பாளர் சபைக்கு தொடர்படுத்துவதற்கும்ம் அதன் பின்னர் பொது திறைசேரிக்கு அனுப்பி அதற்காக அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | மீதி உறுதிப்படுத்துவதற்காக பதிவேடுகளுக்கு உட்பட்ட சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (ஊ) | 2011 ஆம் ஆண்டிலிருந்து மீளாய்வாண்டின் இறுதி வரை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு பெறுமதி சேர் வரியாக ரூபா 3,486,444 தொகை செலுத்த வேண்டியிருந்ததுடன் பெறுமதி சேர் வரியிலிருந்து விடுவிப்பதாக கூட்டுத்தாபனம் கொண்டுள்ள எண்ணத்தை உறுதிப்படுவதற்காக பதிவேடுகளுக்குட்பட்ட எந்தவொரு சான்றும் | மீளாய்வாண்டின் இறுதி வரை ரூபா 3,486,444 ஆன பெறுமதி சேர் வரி அடிப்படையில் செலுத்த வேண்டிய தொகை வாடிக்கையாளர்களிடமிருந்து சேகரிக்கப்பட்ட தொகையொன்றாக இருந்ததுடன் காணப்பட்ட நிதி நெருக்கடியால் இத்தொகை இதுவரையிலும் செலுத்த வேண்டிய தொகையாக நிதி நிலைமை விபரத்தில் காண்பிக்கப்பட்டுள்ளது. தொகை செலுத்த | பெறுமதி சேர் வரி ர்ணயித்த பிரகாரம் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | வேண்டியிருந்ததுடன் பெறுமதி சேர் வரியிலிருந்து விடுவிப்பதாக | |
| (எ) | நிதி நிலைமை கூற்றில் நடைமுறைச் சொத்துக்களின் கீழ் வெளிப்படுத்தப்பட்டுள்ள ரூபா 50,220,922 ஆன கடன் மீதிகள் உறுதிப்படுத்து வதற்காக தேவையான எந்தவொரு சான்றும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் ரூபா 88,813,279.50 பெற வேண்டிய மொத்த மீதிகளில் ரூபா 70,092,898 தொகை 4 ஆண்டுகளுக்கும் இற்கும் 14 இற்கும் இடைப்பட்டதாகும். இம்மீதிகள் உள்ளவாறாக ஏதேனும் நிதியாண்டில் வழங்கப்பட்ட கடன் மற்றும் கடனாக முதலீடுகளிலிருந்து பூர்த்தி செய்யப்படுவதுடன் இதற்காக ஒவ்வொரு நிதியாண்டிலும் மீதி உறுதிப்படுத்தக் கடிதங்கள் அனுப்பி வைக்கப்படுவதுடன் அநேகமானவை உறுதிப்படுத்தி மீண்டும் கிடைத்துள்ளது. | நிதிக்கூற்றுக்களில் நிதி நிலைமை விபரங்களை நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஏ) | 2012 ஆம் ஆண்டிற்கு முன்னிருந்து வரும் மீளாய்வாண்டின் நிதிக் கூற்றுக்களில் கடன்பட்டோர் மீதிகளில் கழித்து காண்பிக்கப்பட்ட ரூபா 47,537,070 ஆன விசேட இழப்பீட்டிற்காக ஒதுக்கீடு மற்றும் ரூபா 1,591,349 ஆன அறவிட முடியாக்கடன் ஒதுக்கீடுகளின் சரியான தன்மையை பரீட்சிப்பதற்காக தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | 2012 ஆம் ஆண்டிற்கு முன்னிருந்து வரும் ரூபா 1,591,349 பெறுமதியான அறவிட முடியாக்கடன் மற்றும் விசேட இழப்பீட்டிற்காக ஒதுக்கீடு களின் பெறுமதி அடிப்படையில் ரூபா 47,537,070 ஆன மீதி உருவாகியுள்ள விதம் தொடர்பாக சரியான தகவல்கள் உங்களுக்கு வழங்கப்படவில்லையென குறிப்பிடப்படும் இக்கூற்றுடன் இணங்க முடியாது. அதற்காக கணக்காய்வினை மேற்கொள்ளும் போது ஆவணங்கள் வழங்கப்பபட்டுள்ளன. | பதில் தவறானது. விசேட நட்டஈட்டிற்காக ஒதுக்கீடு மற்றும் அறவிட முடியாக்கடன் ஒதுக்கீடுகளின சரியான தன்மையை பரீட்சிப்பதற்காக தகவல் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். மேலும் அதற்காக ஏற்றுக்கொள்ளக்கூடிய சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (ஐ) | கடந்த ஆண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 73,683,136 பெறுமதியான கட்டிடங்கள், வாகனங்கள் மற்றும் இயந்திர உபகரணங்கள் போன்ற நிலையான சொத்துக்கள் பதிவேட்டிலிருந்து அகற்றப்பட்டிருந்ததுடன் இதற்கு காரணமான விடயங்கள் அதில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. | 2021 நிதியாண்டின் போது இச்சிக்கல்களை தீர்வு செய்வதற்கு தேவையான ஏனைய நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ளது. | நிலையான சொத்துக்கள் பதிவேட்டிலிருந்து சொத்துக்களை அகற்றுவதற்கான விடயங்கள் அதில் குறிப்பிடப்பட்டு நிலையான சொத்துக்கள் பதிவேடு நாளதுவரையாக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஓ) | நிதி நிலைமை கூற்றில் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் கீழ் காண்பிக்கப்பட்டுள்ள ரூபா 1,645,340 ஆன முகாமைத்துவ செலவினத்தை பரீட்சிப்பதற்காக தேவையான ஆவணங்களுக்கு உட்பட்ட சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை | 2021 நிதியாண்டின் போது இச்சிக்கல்களை தீர்வு செய்வதற்கு தேவையான ஏனைய நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ளது. | தோட்ட முகாமைத்துவ செலவினத்தை பரீட்சிப்பதற்காக தேவையான ஆவணங்களுக்கு உட்பட்ட சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும் |

## 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை.

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1958 இன் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதியச் சட்டத்தின் 15 ஆம் பிரிவு 1980 இன் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கை நிதியச் சட்டத்தின் ii ஆம் பகுதியின் 16(i) ஆம் பிரிவு | 2006 ஆம் ஆண்டிலிருந்து ரூபா 367,667,260 ஆன ஊழியர் சேமலாப நிதியத்தின் பொறுப்பும் ரூபா 8,189,921 ஆன ஊழியர் நம்பிக்கை நிதிய பொறுப்பும் மீளாய்வாண்டின் இறுதி வரை கொடுப்பனவு செய்வதற்குற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் இதனால் கூட்டுத்தாபனத்திற்கு மொத்தம் ரூபா 50,263,217 ஆன மிகை அறவீடு விதிக்கப்பட்டிருந்தது. | ஊழியர் சேமலாப நிதியம் ஊழியர் நம்பிக்கை நிதியம் மற்றும் செலுத்த வேண்டிய பணிக்கொடை தொகை 2018 நிதியாண்டின் இறுதி வரையில் ரூபா 621,185,916 ஆகும். இது 2002 ஆம் ஆண்டிலிருந்து வரும் முகாமைத்துவ பலவீனத்தின் பேரில் நிதி நெருக்கடி காரணமாக உருவாகியதாகும். | 1958 இன் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதியச் சட்டத்தின் 15 ஆம் பிரிவு 1980 இன் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கை நிதியச் சட்டத்தின் ii ஆம் பகுதியின் 16(i) ஆம் பிரிவின் பிரகாரம் தீர்வுசெய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2003 ஜுன் 02 ஆம் திகதிய 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பந்தி | நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் நிறுவகத்தினால் வருடாந்த கணக்குகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமெனினும் மீளாய்வாண்டின் கூட்டுத்தாபனத்தின் | இது கூட்டுத்தாபனத்தின் பல வருடங்களாக (12 வருடங்கள்) காணப்பட்ட இறுதிக் கணக்குகளின் தாமதத்தின் பெறுபேறாக குறிப்பிடலாம். | உரிய வருடாந்த கணக்குகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு உரிய காலப்பகுதியில் சமர்ப்பிக்கப்பட வேண்டும் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | கணக்குகள் 2020 யூன் 29 ஆந் திகதி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த துடன் இதுவரை கணக்குகள் சமர்ப்பிக்க வேண்டிய காலம் 1 ½ ஆண்டுகள் கடந்து இருந்தன. | | |
| (இ) | 2009 நவம்பர் 13 ஆந் திகதிய 438 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 02 ஆம் பந்தி | கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான 07 தொழிற்சாலைகள் 5 ஆண்டு முதல் 40 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக பயன்பாட்டிற்கு எடுக்கப்படாதிருந்ததுடன் இம்மூடிய தொழிற்சாலைகளில் காணப்படும் கட்டிடங்கள், இயந்திரங்கள், உபகரணங்கள் என்பன அம்மூடப்பட்ட காலப்பகுதியில் பயன்பாட்டிலிருந்து ஓரமாக்கப்பட்டிருந்த போதும் அச்சொத்துக்களை கைதவிர்ப்பதற்கு மிகவும் இலாபகரமான முதலீட்டுச் செயற்பாட்டிற்கு ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டில் இந்த பழுதடைந்த பொருட்கள் சரியான மதிப்பீடொன்று மேற்கொள்ளப்பட்டு கேள்வி நடைமுறை ஊடாக விலை கோரி உடைந்த பொருட்களை அகற்றி கூட்டுத்தாபனத்திற்கு வருமானத்தைப் பெற்றுக்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. | மூடிய தொழிற்சாலைகளில் காணப்படும் கட்டிடங்கள், இயந்திரங்கள், உபகரணங்கள் என்பன அம்மூடப்பட்ட காலப்பகுதியில் பயன்பாட்டிலிருந்து ஓரமாக்கப்பட்டிருந்த மையால் அச் சொத்துக்களை கைதவிர்ப்பதற்கு அல்லது கூட்டுத்தாபனத்திற்கு மிகவும் இலாபகரமான முதலீட்டுச் செயற்பாட்டிற்கு ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | 2018 மார்ச் 19 ஆந் திகதிய 01/2018 ஆம் இலக்க சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கையின் 2(அ) பந்தி மற்றும் 02/2015 ஆம் இலக்க 2015 யூலை 10 ஆந் திகதிய அரச நிதிச் சுற்றறிக்கையின் 02 ஆம் பந்தி | கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான பாவனையிலிருந்து அகற்றப்பட்ட 13 லொரிகள், 25 உழவு இயந்திரங்களும் டேலர்களும் 07 கார் வண்டிகள், 03 ஜிப் வண்டிகள், 04 பிணியாளர் வண்டிகள், 01 முச்க்கர வண்டி மற்றும் 43 மோட்டார் சைக்கில்கள் என்பவற்றை 2020 திசெம்பர் 31 ஆந் திகதி வரை கைதவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | 2021 ஆம் நிதியாண்டில் உடைந்த பொருங்கள் சரியான மதிப்பீடொன்று செய்யப்பட்டு சரியான கேள்வி நடைமுறைகள் ஊடாக கேள்வி கோரி பயன்படுத்தப்படாத பொருட்களை கைதவிர்த்து கூட்டுத்தாபனத்திற்கு வருமானமொன்று உழைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இச்சொத்துக்களை கைதவிர்க்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக கூட்டுத்தாபனத்தின் நிதி விளைவுகள் ரூபா 147,798,507 ஆன நட்டமாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான நட்டம் ரூபா 94,932,600 ஆக இருந்தமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டிறான நட்டம் ரூபா 52,865,907 ஆல் அதிகரித்திருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் கூட்டுத்தாபனத்தின் முடிவுப் பொருள் தேயிலை மற்றும் இறப்பர் விற்பனை வருமானம் ரூபா 60,257,117 ஆல் குறைவடைந்தமை இதற்கான பிரதான காரணமாக இருந்தது.

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 04 ஆண்டுகளின் நிதி விளைவுகளைப் பகுப்பாய்வு செய்த போது 2014 ஆம் ஆண்டின் ரூபா 247,673,971 ஆக இருந்ததுடன் 2015 ஆம் ஆண்டின் போது அது ரூபா 213,603,074 வரை குறைந்து மீண்டும் 2016 ஆம் ஆண்டின் போது ரூபா 256,171,541 வரை சிறிய அதிகிப்பொன்று பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. அதிகரித்திருந்தது. 2017 ஆம் ஆண்டின் போது பூர்த்தி தேயிலை மற்றும் தேயிலை கொழுந்து விற்பனை வருமானம் அதிகரித்தமையால் பங்களிப்பில் ரூபா 502,277,402 வரை பாரிய அதிகரிப்பொன்று காண்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டில் காயாத தேயிலை மற்றும் இறப்பர் வருமானம் குறைவடைந்தமையால் பங்களிப்பு ரூபா 430,855,881 வரை குறைவடைந்திருந்தது.

## 3. பெறுகை மற்றும் ஒப்பந்த செயற்பாடு

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பெறுகை வழிகாட்டல் கோவையின் 4.2(அ) பிரகாரம் கூட்டுத்தா பனத்தினால் 2018 ஆம் ஆண்டிற்காக பெறுகை திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. | 2018 ஆம் ஆண்டிற்காக பெறுகை திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளதுட ன் அது 2018.05.02 பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | பெறுகை வழிகாட்டல் கோவையின் 4.2(அ) பிரகாரம் கூட்டுத்தாபனத்தினால் பெறுகை திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | ரூபா 1,398,000 ஆன செலவினமொன்று மேற்கொண்டு தோட்டத்திற்காக துரு பிடிக்காத உருக்கினை கொள்வனவு செய்யும் பெறுகை வழிகாட்டல் கோவையின் 5.3.11(அ) பிரகாரம் கேள்விப் பாதுகாப்பொன்று பெற்றுக் கொள்ளப்படாதிருந்ததுடன் பெறுகை வழிகாட்டலின் 8.9.1 இன் பிரகாரம் பொறுப்பேற்றல் கடிதமொன்று வழங்குனருக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை. | அலுவலக புதிய வளவின நிறுவுவதற்காக விரைவுபடுத்துவுதற்காக அவ்வாறு செய்யப்பட்டிருந்தது.. | பெறுகை வழிகாட்டல் கோவையின் 5.3.11(அ) பிரகாரம் கேள்விப் பாதுகாப் பொன்று பெற்றுக்கொள்ளப்பட வேண்டியிருந்ததுடன் பெறுகை வழிகாட்டலின் 8.9.1 இன் பிரகாரம் பொறுப்பேற்றல் கடிதமொன்று வழங்குனருக்கு வழங்கப்பட வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டின் போது ரூபா 840,000 செலவினம் மேற்கொள்ளப்பட்டு 200,000 மதுரு கூறு பொதியிடல் உரைகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் கூறுவிலை கோரும் போது பெறுகை வழிகாட்டலின் 6.3.1 (அ) இன் பிரகாரம் கேள்விப் பெட்டியினுள் | கடமை தேவைப்பாட்டின் பிரகாரம் நிறுவன உத்தியோகத்தர்களிடமி ருந்து பெற்றுக்கொண்ட வாய்மூல ஆலோசணைகளின் பிரகாரம் நடவடிக்கை | கூறுவிலைகளைப் பெற்றுக் கொள்ளும் போது 6.3.1(அ) வழிகாட்டலின் பிரகாரம் கேள்விப் பெட்டியினுள் அல்லது பதிவுத் தபாலில் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அல்லது பதிவுத் தபாலில் பெற்றுக்கொள்ளப்படாமல் மின்னஞ்சல் மூலம் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. மேலும் பெறுகை வழிகாட்டலின் 7.4.1இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமல் கேள்வி திறத்தல் மற்றும் மதிப்பீட்டு செயற்பாடுகள் 100 நாட்கள் தாமதப்படுத்தப்பட்டிருந்தன. | எடுக்கப்பட்டன. | |
| (ஈ) | ரூபா 1,950,000 செலவில் தலைமை அலுவலகத்தின் கீழ் மாடி மற்றும் முதலாம் மாடி பகுதிகளாக வேறாக்கப் பட்டிருந்ததுடன் பெறுகை வழிகாட்டல் கோவையின் 6.2.2 இன் பிரகாரம் கேள்வி கோரும் ஆகக்குறைந்த காலஎல்லை கேள்விதாரரர்களுக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை. பெறுகை வழிகாட்டல் கோவையின் 2.8.1(ஆ) இன் பிரகாரம் தொழில்நுட்ப குழு விடயம் தொடர்பான நிபுணர் ஒருவர் சமூகமளிக்காமல் இருந்ததுடன் பெறுகை வழிகாட்டல் கோவையின் 8.9.1 இன் பிரகாரம் ஒப்பந்தக்காரருக்கு முறைப்படி பொறுப்பேற்றல் கடிதமொன்று வழங்கப்பட்டிருக்கவில்லை. பெறுகை வழிகாட்டல் கோவையின் 8.9.1 (அ) பிரகாரம் எழுத்துமூல ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்படாதிருந்ததுடன் பெறுகை வழிகாட்டல் கோவையின் 8.12.2 இன் பிரகாரம் வேலைப் பூர்த்தி அறிக்கையொன்று (Completion Report) பெற்றுக்கொள்ளாமல் ஒப்பந்தக்காரருக்கு ரூபா 250,000 இறுதிக் கொடுப்பனவும் செய்யப்பட்டிருந்தது. | தகைமையுடைய தொழில்நுட்ப உத்தியோகத்தர் ஒருவரின் ஒத்துழைப்பு இல்லை என்பதை ஏற்றுக்கொள்கின்றேன். | பெறுகை வழிகாட்டல் 6.2.2, 2.8.1(ஆ), 8.9.1, 8.9.1 (அ) மற்றும் 8.12.2 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |